


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.1.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் சார்பில் இரண்டு நாட்கள் நடத்தப்படும் "Umagine TN 2026" தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டில், தமிழ்நாடு ஆழ்நிலைத் தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனக் கொள்கை 2025–26 யை (Tamil Nadu Deep Tech Startup Policy 2025–26) வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.பி.கார்த்திகேயன், மின்னாளுமை இயக்குநர் / தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் தலைமை நிருவாக அலுவலர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) மரு.இரா.வைத்திநாதன், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இயக்குநர் (பொறுப்பு) கோமகன், மெட்டா இந்தியா நிறுவனத்தின் இந்தியத் தலைவர் அருண் ஸ்ரீனிவாஸ், CII தமிழ்நாடு தலைவர் உன்னிகிருஷ்ணன், எழுத்தாளர், கவிஞர் மற்றும் ஆராய்ச்சியாளர் மதன்கார்க்கி, பல்வேறு நாடுகளின் தூதரக அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.1.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கத்தின் தலைவர் தெய்வசிகாமணி மற்றும் நிர்வாகிகள் சந்தித்தனர். இந்நிகழ்வின்போது, கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆகியோர் உடனிருந்தனர்.

## இந்தப் பொங்கல் மகிழ்ச்சிப் பொங்கல்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைதளப் பதிவு!









முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.1.2026) சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில், 49–வது சென்னை புத்தகக் காட்சி 2026–ஐ தொடங்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, வி.ஜி.பி. குழும தலைவர் வி.ஜி.சந்தோசம், தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் (பபாசி) தலைவர் ஆர்.எஸ்.சண்முகம், துணைத் தலைவர்கள் நக்கீரன் கோபால், வே.புருஷோத்தமன், செயலாளர் எஸ்.வயிரவன், பபாசி சங்க நிர்வாகிகள், விருதாளர்கள், புத்தகப் பதிப்பாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (8.1.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் சார்பில் இரண்டு நாட்கள் நடத்தப்படும் "Umagine TN 2026 , EROS Gen AI, Better Compute Works Inc, Phantom Digital Effects Limited, Rewin Health, Cube84, WeLoadin Studio LLP ஆகிய நிறுவனங்களுடன் தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.பி.கார்த்திகேயன், மின்னாளுமை இயக்குநர் / தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் தலைமை நிருவாக அலுவலர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) மரு.இரா.வைத்திநாதன், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இயக்குநர் (பொறுப்பு) கோமகன், மெட்டா இந்தியா நிறுவனத்தின் இந்தியத் தலைவர் அருண் ஸ்ரீனிவாஸ், CII தமிழ்நாடு தலைவர் உன்னிகிருஷ்ணன், எழுத்தாளர், கவிஞர் மற்றும் ஆராய்ச்சியாளர் மதன்கார்க்கி, பல்வேறு நாடுகளின் தூதரக அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.


